
# சாராம்சம்

## வெளிநாட்டு பெருநிறுவன கட்டமைப்பு

## “உண்மையான உரிமையாளர்களை மறைத்த”

*அமேசன் புத்தகங்கள்:* ***Overseas Corporate Structures, Which hide 'Real Owners' - Foreign Business Empire of a Sri Lankan Entrepreneur ?***




***அளவு - 8.25" X 11" – பக்கங்கள் 570***

எவ்வாறு வெளிநாட்டு பெருநிறுவனங்கள் தங்களது உண்மையான உரிமையாளர்களை மறைத்தது என்பது தொடர்பில் தகவல்களோடும் ஆவணங்களோடும்,ஆதாரங்களோடும் ஆராய்ச்சி செய்யப்பட்ட தகவல்களோடும் நூலாசிரியர் மிகச்சிறப்பாக விளக்கியுள்ளார்; மற்றும் எவ்வாறு ஒரு நாட்டில் உள்ள நபர்களின் பணமானது வேறொரு நாட்டில் உண்மையான உரிமையாளரின் பெயரை மறைத்து பதுக்கப்பட்டுள்ளது என்பது குறித்தும் இப்புத்தகம் வெளிக்கொண்டுவந்துள்ளது

இந்த புத்தகமானது நூலாசிரியரினால் விசேடமாக இலங்கையின் நன்கு அறியப்பட்ட வர்த்தகர் உபாலி விஜேவர்தன இப்புத்தகத்தில் இறந்து விட்டவராக குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கையில் அவருடைய வியாபாரமும் சொத்துக்களும் தொடர்பிலும் மற்றும் பல்வேறு வெளிநாடுகளில் பறந்து காணப்படும் அவருடைய சொத்துக்கள் தொடர்பிலும் தொகுக்கப்பட்டுள்ளது;மேலும் நூலாசிரியர் இது தொடர்பில் ஆழமான ஆய்வுகளை நடாத்தி தரவுகளை திரட்டியதுடன் அப்படியாக திரட்டப்பட்ட தகவல்களை சிங்கப்பூரில் வாழும் ஐக்கிய இராஜ்ஜிய பாரிஸ்டர் சட்டத்தரணியான உபாலி விஜேவர்தனவிற்கு நம்பிக்கைகுரியவரான ஈஸ்வர் நாகப்பன் அவர்களிடம் உறுதிப்படுத்திக் கொண்டார்.

உபாலி விஜேவர்தன அவர்களின் வெளிநாட்டு வியாபார முயற்சிகள் அல்லது வெளிநாட்டு சொத்துக்கள் மற்றும் வெளிநாட்டு வியாபார பரிமாற்றங்கள் என்பன தொடர்பில் அவரது இரு சகோதரிகளான ஹெலனா அனோஜா தேவி விஜேசுந்தர மற்றும் கல்யாணி தேவி ஆடிகாலே ஆகியோர் செய்த விருப்பாவன வழக்கு எண் 31166/T பந்தி 5 (b) ல் கீழ்வரும் வாக்குமூலம் கொடுக்கப்பட்டது.

5 (b) சட்டபூர்வமான மற்றும்/அல்லது சமத்துவமான ஆர்வத்தினை குறில் அன்ஸ்டால்ட் (Lichtenstein தலமாக கொண்ட சட்டபூர்வமான அமைப்பு) ஊடாக தனது பெருவாரியான வெளிநாட்டு சொத்துக்களை மரணித்தவர் உரிமை கொண்டு கட்டுப்பாட்டில் வைத்திருந்ததோடு,100% அல்லது பெருவாரியான பங்குகளை பின்வருவன உள்ளடங்கலான பல நிறுவனங்களில் வைத்திருந்தார்.

வரையறுக்கப்பட்ட குறில் நிறுவனங்கள் (ஹாங் கொங்கில் பதிவு செய்யப்பட்டது)
வரையறுக்கப்பட்ட ரெக்ஸ் (ஹாங் கொங்)
வரையறுக்கப்பட்ட லெக்ஸ் (ஹாங் கொங்)
வரையறுக்கப்பட்ட ஹைபெரியன் முதலீடுகள் (ஹாங் கொங்)

வரையறுக்கப்பட்ட உபாலி சர்வதேச தனியார் நிறுவனம் (ஹாங் கொங்)
வரையறுக்கப்பட்ட உபாலி (சிங்கப்பூர்)தனியார் நிறுவனம் (சிங்கப்பூர்)
வரையறுக்கப்பட்ட உபாலி (தாய்லாந்து) நிறுவனம் (தாய்லாந்து)
வரையறுக்கப்பட்ட குறில் டிரேடிங் (சிங்கப்பூர்)
உபாலி (மலேசியா) Sdn பெர்ஹாட் (மலேசியா)
குறில் தோட்டங்கள் Sdn பெர்ஹாட் (மலேசியா)
தேனாமாஜு நிறுவனங்கள் Sdn பெர்ஹாட் (மலேசியா)
கியாடாஜு Sdn பெர்ஹாட் (மலேசியா)
கிராண்ட் மத்திய முதலீட்டு கூட்டமைப்பு வதநி (ஐ.இரா) மற்றும்
உபாலி (அஐஇரா) Inc (அஐஇரா)

மறைந்தவர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பின்வரும் இடங்களிலும் பங்குகளை கொண்டிருந்தார்

வரையறுக்கப்பட்ட நாகொல்ல (சிலோன்) இறப்பர் மற்றும் தேயிலை தோட்டங்கள் (ஐ.இரா.)
வரையறுக்கப்பட்ட யாட்டியாந்தோட்டை (சிலோன்) இறப்பர் கம்பனி (ஐ.இரா.)
வரையறுக்கப்பட்ட கிராண்ட் மத்திய (சிலோன்) இறப்பர் தோட்டங்கள் (ஐ.இரா.)
வரையறுக்கப்பட்ட ஹைலண்ட் சிலோன் தேயிலை கம்பெனி (ஐ.இரா.)
வரையறுக்கப்பட்ட நகொள்ள கூட்டமைப்பு (ஐ.இரா.)
வரையறுக்கப்பட்ட ரிச்ச்லான்(ஐ.இரா.)
வரையறுக்கப்பட்ட கிராண்ட் மத்தியம் (ஐ.இரா.)
வரையறுக்கப்பட்ட ஜோன்சன் அன்ட் பார்ன்ஸ் (ஐ.இரா.)
வரையறுக்கப்பட்ட ஜோன்பார் வியாபாரம் (ஐ.இரா.) மற்றும்
வரையறுக்கப்பட்ட அடம்ஸ் பீக் தேயிலை தோட்டங்கள் (ஐ.இரா.)

பல்வேறு நாடுகளில் பறந்து காணப்பட்ட வெளிநாட்டு வியாபார சொத்துக்கள் தொடர்பிலான விசாரணை தொடர்பிலான அறிக்கைகள் நூலாசிரியரினால் முழுமையாக கோர்க்கப்பட்டு உச்ச நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதோடு அவ்வறிக்கையில் இந்த விடயத்தில் ஆர்வம் உள்ளோருக்காய் இப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது

இவ்வாறான விசாரணைகளின் மூலம் வெளிக்கொணரப்பட்ட உண்மை யாதெனில், கண்ணுக்கு புலப்படக்கூடிய கம்பனிகள் மலேசியா,சிங்கப்பூர்,தாய்லாந்து,ஐக்கிய இராஜ்ஜியம்,ஐக்கிய அமெரிக்கா,போன்ற நாடுகளில் செயற்பாட்டில் இருந்ததோடு,வெளிப்படைத்தன்மையற்ற குழப்பகரமான கம்பனிகள் ஹாங் கொங் இல் இயங்கியமை எடுத்துக் காட்டப்பட்டுள்ளதோடு,இறுதியான உண்மையான உரிமையாளர்கள் லேய்ச்டென்ஸ்டைன் இணை தளமாக கொண்ட நிருவாகி என்ற போர்வையினால் மறைக்கப்பட்டார்கள் என்பதாகும்.

மேலும் வெளிக் கொணரப்பட்ட உண்மை யாதெனில்,உபாலி விஜேவர்தனவின் இரு சகோதரிகளும், உபாலி விஜேவர்தனவின் தோட்டங்களின் ஒரு பகுதியை தமக்கு உரித்தான பரம்பரை சொத்து எனக் கேட்டிருந்தபோது, லேய்ச்டென்ஸ்டைன் னை தளமாக கொண்டிருந்த நிர்வாகி, உபாலி விஜேவர்தனவின் வியாபார சொத்துக்களின் உண்மைகளை மறைக்காது, உபாலி விஜேவர்தனவின் மரண சான்றுதலையோ,அல்லது இந்த தோட்டத்தை பகிரும்படிக்கான அவரது இறுதி உயிலயோ மாத்திரமே கேட்டிருந்ததோடு,தான் உபாலி விஜேவர்தனவின் சொத்துக்களை நிர்வகிப்பதை மறுக்கவும் இல்லை, அதேவேளை, இவை உபாலி விஜேவர்தனவின் சொத்துக்கள் அல்ல என மறுப்பு கூறவும் இல்லை. இதனாலே நிருபனமான உண்மை என்னவெனில்,அவர் நிர்வகித்த குழப்பகரமான சொத்துக்கள் உபாலி விஜேவர்தனவிநதேயன்றி வேறு எவருடையதுமல்ல என்பது சந்தேகத்திற்கிடமின்றி உறுதியாகிற்று.

SENATOR H.C. DR. DR.

Herbert Batliner

RECHTSANWALT

MITARBEITER:
HANS GASSNER, RECHTSAGENT
DR. IUR. PETER MONAUNI
DR. IUR. ALEX WIEDERKEHR
DR. OEC. KURT ALIG
EIDG. DIPL. BÜCHEREXPERTE
DR. IUR. ERNST WALCH, RECHTSANWALT
M.C.J., ADMITTED TO NEW YORK BAR

FL-9490 VADUZ / LIECHTENSTEIN
AEULESTRASSE 74 POSTFACH 86
TELEFON: 075 / 6 11 66
TELEX: 889370 DRBA FL
TELEGRAMM: DORBAT VADUZ
TELEFAX: 075 / 2 43 43

Vaduz, 3rd June 1987 sn

Mr. V. Murugesu
Solicitor
att. Mr. Neelakandan
Hemas Building (3rd Floor)
York Street Colombo-1

SRI LANKA

RECEIVED
- 8 JUN 1987
MURUGESU
ATTORNEYS-AT-LAW
Ct.10(95)

Your Ref.: KN/DJWT-Ct.10(95)

Dear Mr. Neelakandan,

re: KURIL ANSTALT

We are in receipt of your registered letter dated May 25, 1987 for which we thank you very much.

Please be informed that according to contingent rules of the Liechtenstein company law particulars of the company can only be disclosed to second beneficiaries or their representatives, if the original of a death certificate issued by the competent local authorities can be produced to the Board of Directors.

In addition to that the original of the company documents, in particular Deed of Assignment (Zessionserklärung) as well as the By-Laws (Beistatut) must be presented by any persons pretending that they are entitled to the assets of the company.

Yours sincerely,


Dr.iur. Alex Wiederkehr

ஜனாதிபதி *JR* ஜெயவர்தனவின் மருமகனாக இருந்த உபாலி விஜேவர்தன தன்னுடைய பிரத்தியேக லியர் ஜெட் விமானத்தில் மலேசியாவிலிருந்து இலங்கைக்கு வருகின்றபோது குறித்த லியர் ஜெட் விமானமானது மலேசியாவிலிருந்து புறப்பட்டதன் பின்னர் *13.02.1983* அன்று பாரிய புகைச்சலுடனும் சத்தத்துடனும் காணாமற்போனது. நிபுணர்களினால் நடாத்தப்பட்ட விசாரணைகளின்போது இந்த லியர் ஜெட்டின் பாகங்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டவைகள் வெளிப்படுத்தப்பட்டன, இந்த விசாரணை அறிக்கைகளின் பகுதிகளும் இப்புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நூலாசிரியரினால் வெளிப்படுத்தப்பட்டபடி உபாலி விஜேவர்தன அவர்கள் இலங்கைக்கு திரும்பி வந்தவேளை அவர் வந்தவுடனேயே இலங்கையின் நிதியமைச்சராக பதவியேற்க இருந்தார், இந்த விடயம் ஒரு சிலருக்கு மாத்திரமே தெரிந்திருந்ததோடு, நூலாசிரியர் இப்புத்தகத்தில் உபாலி விஜேவர்தன இலங்கை திரும்பும் முன் இரவை எவ்வாறு கழித்தார் என்பதனையும் விபரமாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தரவிகளின் சேர்க்கைக்கு பின்னணியாக இருந்த காரணம் என்னவெனில், மேற்குறித்தவாறு உபாலி விஜேவர்தன காணாமற் போனதற்கு பிற்பாடு, அவர் திருமணம் ஆகியிருந்தாலும் பிள்ளைகள் இல்லாத காரணத்தாலும்,தன்னுடைய தோட்டங்களின் சொத்துக்களை பங்கிடும்படிக்கான இறுதி உயிலை கொண்டிருக்காத காரணத்தாலும்; உயிருடன் இருந்த அவரது சகோதரிகளான ஹெலனா அனோஜா தேவி விஜேசுந்தர அவர்களும் அனுலா கல்யாணி தேவி அட்டிகாலெ அவர்களும் நியாயபூர்வாமாக தோட்டங்களின் *50%* தமது உரித்தாக கோரியதுடன் *50%* உரிமைத்துவத்தையும் கோரிய வழக்கானாது உச்ச நீதிமன்றின் முன் தீர்ப்பிறகாக கொண்டு வரப்பட்டது .

இலங்கை உச்ச நீதிமன்றமானது, இவருடைய தோட்டங்கள் மீதான கேள்விகளுக்கு தீர்வை கொண்டுவரும் முகமாக, உபாலி விஜேவர்தனவின் சொத்துக்கள் தொடர்பில் அவருடைய தோட்டங்களின் கணக்காய்வாளர் மற்றும் அவருடைய இரு சகோதரிகளினதும் உத்தியோகபூர்வ ஆலோசகராவிருந்த நூலாசிரியர் என்போரை கூட்டாக ஒரு விசாரணை அறிக்கையை தயாரித்து நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கும்படி வழிகாட்டியது.



JOINT - REPORT

BY

MR. KINGSLEY JAYALATH, CHARTERED ACCOUNTANT
AUDITOR OF THE ESTATE OF LATE MR. P.U. WIJEWARDENE

AND

MR. NIHAL SRI AMERESEKERE, CHARTERED ACCOUNTANT
CONSULTANT TO MRS. H.A.D. WIJESUNDERA & MRS. A.K. ATTYGALLE


ON THE ACCOUNTS OF THE ESTATE OF
LATE MR. P.U. WIJEWARDENE

AS PER

SUPREME COURT ORDER DATED 17.12.1999
IN S.C. (SPECIAL) LEAVE TO APPEAL NO. 38/99

26TH APRIL 2000

நீதிமன்றம் கேட்டுக் கொண்டதற்கிணங்க, நூலாசிரியர் உபாலி விஜேவர்தன அவர்களின் வெளிநாட்டு சொத்துக்கள் தொடர்பில் மேலும் விசாரணைகளை மேற்கொண்டு மூன்று அறிக்கைகளை உச்ச நீதிமன்றுக்கு சமர்ப்பித்தார்.



INTERIM-REPORT


I

ON

PRELIMINARY INQUIRIES AND INVESTIGATION INTO THE FOREIGN BUSINESS INTERESTS AND/OR FOREIGN ASSETS AND/OR FOREIGN BUSINESS TRANSACTIONS, REFERRED TO IN THE JOINT-REPORT DATED 28.4.2000 ON THE ACCOUNTS OF THE ESTATE OF LATE MR. P.U. WIJEWARDENE, WHICH JOINT-REPORT HAD BEEN PREPARED AS DIRECTED BY THE SUPREME COURT AND SUMITTED TO THE SUPREME COURT



13TH SEPTEMBER 2000




INTERIM-REPORT

II

ON

PRELIMINARY INQUIRIES AND INVESTIGATIONS INTO THE FOREIGN BUSINESS INTERESTS AND/OR FOREIGN ASSETS AND/OR FOREIGN BUSINESS TRANSACTIONS, REFERRED TO IN THE JOINT-REPORT DATED 26.4.2000 ON THE ACCOUNTS OF THE ESTATE OF LATE MR. P.U. WIJEWARDENE, WHICH JOINT-REPORT HAD BEEN PREPARED AS DIRECTED BY THE SUPREME COURT AND SUMITTED TO THE SUPREME COURT

17TH JANUARY 2001



INTERIM-REPORT

III

ON

PRELIMINARY INQUIRIES AND INVESTIGATIONS INTO THE FOREIGN BUSINESS INTERESTS AND/OR FOREIGN ASSETS AND/OR FOREIGN BUSINESS TRANSACTIONS, REFERRED TO IN THE JOINT-REPORT DATED 26.4.2000 ON THE ACCOUNTS OF THE ESTATE OF LATE MR. P.U. WIJEWARDENE, WHICH JOINT-REPORT HAD BEEN PREPARED AS DIRECTED BY THE SUPREME COURT AND SUMITTED TO THE SUPREME COURT

27TH APRIL 2001

மேற்குறித்த விசாரணைகளில் கண்டுபிடிக்கப்பட்ட, அதிர்ச்சிகரமான தகவல்களையும் நூலாசிரியர் இந்த புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளதோடு, இவற்றுள் உபாலி விஜேவர்தனவின் வெளிநாட்டு சொத்துக்களை ஒப்பந்தம் என்னும் பேரில் எவ்வாறு அவருடைய மாமனாரான கலா. சிவாலி ரத்வத்த அவர்களும் அவருடைய நெருங்கிய வியாபார பங்காளியான R. முருகையா அவர்களும் விற்றார்கள் என்பதனை ஆதாரங்களோடு காட்டியுள்ளதுடன், இதற்கு மேற்குறித்த ஐக்கிய இராஜ்ய பரிஸ்டரான சிங்கப்பூரில் வாழும் சட்டத்தரணி ஈஸ்வர் நாகப்பன் அவர்கள் சான்று பகர்ந்தார். கீழே உள்ள ஒப்பந்தத்தில் காணப்படும் கையொப்பங்கள் இதனை முற்றாக உறுதி செய்கிறது.

10. General

(a) The Company has not delegated any powers under a power of attorney which remains in effect nor has it given any other authority (express implied or ostensible) which is still outstanding or effective to any person to enter into any contract or commitment or do anything on its behalf.

(b) So far as the Vendor is aware neither this Agreement not Completion will or is likely to cause the Company to lose the benefit of any right or privilege it presently enjoys.

KURIL ENTERPRISES LIMITED

By ...........................

Name Dr. S.H. RATNATTE

Title Attorney for Kuril Enterprises Ltd.

R. MURUGIAH
ATTORNEY
KURIL ENTERPRISES LTD

Signed in the presence of James Eardley Senevirathne
Attorney-at-law

PEACOCK (LONDON) LIMITED

By ....I Nahappan.........

Name Ishwar Nahappan

Title Director

Signed in the presence of:-
S.J. Fento
25-02 Ocean Building
10 Collyer Quay
S'pore 0104
English Solicitor

உபாலி விஜேவர்தன 13.2.1983 ல் காணாமற்போனதுடன், அவருடைய சட்ட அதிகாரமானது அவருடைய நெருங்கிய வியாபார பங்காளியான R . முருகையாவிற்கு வழங்கப்பட்டிருந்தது

மேற்குறித்த துரதிஷ்டவசமான லியர் ஜெட் விமானம் காணாமற் போன சம்பவதின் பின்னர், திரு.R. முருகையா அவர்கள் தனது சட்ட அதிகாரங்களை பயன்படுத்தி, கேள்விக்குரிய வகையில் அது செல்லுபடியாகாததாக இருந்த போதும், மாற்று சட்ட அதிகாரத்தை உபாலி விஜேவர்தனவின் மனைவியான லக்மினி விஜேவர்தனவிற்கு வழங்கியிருந்தார்.

உபாலி விஜேவர்தன காணாமற்போனதற்கு பின்னர் லக்மினி விஜேவர்தன சட்ட அதிகாரங்களை பயன்படுத்தி அவருடைய சில சொத்துக்களை மாற்றியும் விற்றும் இருந்தார். இதனை அவர் உபாலி விஜேவர்தனவின் தோட்டத்தில் கடமைக்கு திரும்பல் தொடர்பில் 13.2.1983 இற்கு பின்னர் அவரை யாரும் காணவோ எவ்வித தகவல்களோ இல்லை என்பதை அறிக்கை செய்தபோது தெரிவித்திருந்தார். ஆதாரம்

3/166/T

Form No. : ED 1

Estate Duty File No. ......................

Please quote this number in every communication relating to this declaration.

ESTATE DUTY—DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA

Declaration of Property required under Section 24 of the Estate Duty Act No. 13 of 1980.

| | | | |
|---|---|---|---|
| Full Name of the Deceased | PHILIP UPALI WIJEWARDENE | Whether the Deceased left a Last Will | No - Intestate |
| Date and Place of Death | On or about 13th February 1983 | | Wijewardene ... P.O. Box 154, Colombo. Widow of the said deceased and purported Administratrix |
| Age and Occupation | 45 years. Company Director | Name and address of the Attorney-at-Law acting for him | Messrs. Julius & Creasy, P.O. Box 154, Colombo |
| Domicile | Sri Lanka | | D. O. Colombo ... |
| Estate Duty File Number | 7/753/2/1 | | |

I, LAKMANI RATWATTE WIJEWARDENE (Name in full) declare that to the best of my knowledge information and belief the statements contained in this form and in the schedules attached hereto are true and correct an that I have disclosed all the property liable to estate duty on the death of the deceased and have made a true and correct estimate of the value of such property.

Dated this 28 day of April 19 86

Signature of Declarant.

மேலும் எழும் கேள்வியென்னவென்றால், சட்ட அதிகாரத்தை ஒருவர் கொடுக்கும் போது குறித்த நபர் வெளிநாட்டில் இருக்கும்போது அந்த குறித்த நேரத்தில் அவர் அறிந்திருக்கும் வகையில் அவர் சார்பில் தேவையான ஆவணங்களில் கையொப்பமிடுதலுக்கே ஆகும்;ஆகவே அப்படியாக பெறுபவருக்கு அறிவுறுத்தல் உள்ளபோது அந்த சட்ட அதிகாரத்தை அவர் வேறு எந்த தேவைக்கும் பாவிப்பதும் விசேடமாக மாற்று சட்ட அதிகாரத்தை வழங்குவதன் மூலம் அவர்களின் பெயரில் சொத்துக்களை மாற்றிக் கொள்வதற்கோ அல்லது அவர்கள் நன்மை அடையும் வகையில் நடந்து கொள்ளவோ முடியுமா என்பதும் கேள்விக்குரிய விடயமாகும். இதனுடைய சட்ட செல்லுபடியையும்,பெறுமதியையும் தீர்மானிப்பது சட்டத்துறையின் பிரச்சினையாகும்.

எவ்வாறெனினும் இலங்கை உச்ச நீதிமன்றானது வழக்கிலுள்ள சட்டத்தின் பிரகாரம், உபாலி விஜேவர்தன அவர் காணாமற்போன 13.2.1983 லிருந்து ஒரு வருடத்தின் பின்னர் 13.21984ல் இறந்து விட்டதாக தீர்ப்பளித்தது

உச்ச நீதிமன்றானது மேற்குறித்த தீர்ப்பை பிரதம நீதியரசர் சரத் N சில்வா மற்றும் நீதியரசர் நிஹால் ஜயசிங்க என்போர் ஆமோதித்ததுடன் நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்க நிராகரித்த போது, பிரிந்து வழங்கிய தீர்ப்பாக அமைந்ததுடன், உபாலி விஜேவர்தனவின் லியர் பிரத்தியேக ஜெட் விமானத்தில் அவர் உட்பட ஐந்து பேர் பயணித்திருந்த போது, இந்த சம்பவம் தொடர்பில் நிபுணர்களின் அறிக்கையானது கருத்தில் கொள்ளப்படாமையை சரியான வகையில் காரணங்காட்டி அவர் இந்த தீர்ப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்திருந்தார்.

குறிப்பாக அதே நேரம் குறித்த லியர் ஜெட்டில் பயணித்த 5பேரில் ஒருவரான ஆனந்த சரத் பெலிமுகாந்திரம் என்பவர் 13.2.1983 அன்று இறந்து விட்டதாக கூறி கம்பஹா மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்து அவரது மரண சான்றிதழையும் வழங்கியிருந்தது. இப்புத்தகத்தில் வெளிக்காட்டப்பட்டுள்ள அதிர்ச்சிகரமான விடயம் என்னவெனில் மேற்குறித்த உச்ச நீதிமன்றின் பெரும்பான்மை தீர்ப்பானது, அதே லியர் ஜெட் விமானத்தில் பயணித்த இன்னொமொரு நபர் தொடர்பாக கம்பஹா மாவட்ட நீதிமன்றின் தீர்ப்பிற்கு முற்றிலும் முரணாக அமைந்தது.

மேலும் கேள்விக்குரிய இன்னொமொரு விடயம் என்னவெனில் ஒரே விமானத்தில் பயணம் செய்த இருவர், அந்த விமானம் காணாமற் போனதற்கு பின்னர் இருவரும் ஒரே தினத்தில் மரணித்ததாக தீர்ப்பளிக்காமல் நீதிமன்றை ஒரு கேளிக்கை ஆக்கி இருவரும் வெவ்வேறு தினங்களில் மரணித்ததாக தீர்ப்பளித்ததுமன்றி - இரு மரணத்திற்கும் இடையில் ஒரு வருட இடைவெளி வேறும் இருந்தது.

ஆய்வு செய்யப்பட்ட உபாலி விஜேவர்தன தோட்டங்களின் ஆய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கைகளில் உறுதிப்படுத்தப்பட்ட விடயம் என்னவெனில் உபாலி விஜேவர்தன அவர்கள் 13.2.1983ல் இறந்துவிட்டதாகவும் காலஞ்சென்ற உபாலி விஜேவர்தன தோட்டங்களின் கணக்கறிக்கைகள் ஆய்வு செய்யப்பட்டு உறுதி செய்யப்பட்டது என்பதாகும். எனவே இந்த பின்னணியில், குறித்த சட்ட அதிகாரத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட மாற்று சட்ட அதிகாரத்தின் மூலம் செய்யப்பட்ட உபாலி விஜேவர்தன அவர்களின் சொத்துக்களின் பரிமாற்றமும் விற்பனைகளும் சட்ட பூர்வமாக உபாலி விஜேவர்தன அவர்கள் மீள் உயிர் பெற்று வந்தாரா என்ற கேள்வி எழுவதுடன், இப் புத்தகமானது ஒரு தலைப்பட்சமான சோக நகைச்சுவையான இந்த விடயம் தொடர்பில் விடயங்களை வெளிக்கொணர்ந்துள்ளது. ஆதாரம்

KINGSLEY JAYALATH

**KINGSLEY JAYALATH & CO.**
Chartered Accountants

21 July 1997

Mrs L R Wijewardene
The Administratrix of the
Estate of Late Mr P U Wijewardene
38 Thurstan Road
Colombo 3

Dear Madam,

**Audit Report of the Estate of Late Mr P U Wijewardene**
**Period covered : 13 February 1983 - 31 March 1996**

We have pleasure in forwarding herewith the audited accounts of the Estate of Late Mr P U Wijewardene for the financial years 1983/84 to 1995/96. We wish to report as follows:

- **Assets & Liabilities**

  We have considered as correct the values accepted by the Department of Inland Revenue for estate duty purposes of the assets and liabilities on the date of disappearance of Mr P U Wijewardene.

- **Power of Attorney**

  We have accepted the power - of - attorney given by Mr P U Wijewardene to Mr Ramalingam Murugiah and of the substitute (Mrs Lakmani Ratwatte Wijewardene) of Mr Ramalingam Murugiah.

- **Direct Confirmations**

  We have not received direct confirmation of bank balances at the end of the financial years. Further, direct confirmations of balances from debtors and creditors too have not been received.



KINGSLEY JAYALATH

**KINGSLEY JAYALATH & CO.**
Chartered Accountants

- **Payment of Taxes**

  During the period under consideration Rs.11,930,452, Rs.1,346,231 and Rs. 1,401,0[illegible] were paid as income tax and wealth tax, capital levy tax, and estate duty respectively.

  All tax payments have been finalised upto Y/A 1988/89.

We shall be pleased to submit any other information that you may require in this regard.


Yours sincerely,

**KINGSLEY JAYALATH & CO.**
Chartered Accountants




*பின்வரும் அட்டவணையானது பல்வேறு நாடுகளில் பறந்து காணப்பட்ட பெயரளவு கம்பெனிகளின் பெயரில் பதிவு செய்யப்பட்டதும் இறுதியாக நிருவாகி என்ற பெயரில் லேய்ச்டென்ஸ்டெய்ன் இனை தளமாக கொண்டிருந்த குழப்பகரமான நிறுவனத்தினால் நிறுவகிக்கப்பட்டதுமான விஜேவர்தனவின் சொத்துக்கள் தொடர்பில் வெளிக்காட்டுகிறது.*

# CHART - DEPICTING THE COPORATE STRUCTURAL RELATIONSHIPS



**THE RESULTANT POSITION AFTER THE SALES OF THE SHAREHOLDING OF THE FOREIGN COMPANIES (THOSE SOLD DEPICTED SHADED), REFERRED TO IN THE JOINT-REPORT DATED 26.4.2000, AFTER THE DEATH OF LATE MR. P.U. WIJEWARDNE ON 13.2.1983**

***CHART 3***



உபாலி விஜேவர்தனவின் வெளிநாட்டு சொத்துக்கள் தொடர்பில் நாணயமாற்று கட்டுப்பாட்டாளர் தீவிர விசாரணைகளை செய்து கொண்டிருந்த போது அவரது மாமனாரான கலா.சிவாலி ரத்வத்த காலமானார். அதன் பின்னர் எந்தளவு தூரத்திற்கு நாணயமாற்று கட்டுப்பாட்டாளர் விசாரணைகளை மேற்கொண்டார் என்பது இரகசியமாகவே இருந்ததோடு, சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தில் இருந்தவர்களுக்கு இருந்த சமூக அரசியல் உண்மையினை வெளிக்காட்டியது.

***புத்தகத்தின் பகுதிகள்***

***ஐ.இரா. பவுண் (அண்ணளவாக)***

***வ.த.க. கிராண்ட் மத்திய முதலீட்டு கூட்டமைப்பின் (ஐ.இரா.)***

***74.37 பங்குகளின் விற்பனை (1985)***
***1,936,743***

***உபாலி (மலேசியா) Sdn, Bhd, மலேசியா வின் பங்குகளின் விற்பனை***
***( மாற்றக்கூடிய கிராண்ட் மத்திய முதலீடுகள் வ.த.க ஐ.இரா.(1986)***
***570,000***

***குறில் தோட்டங்களின் Sdn,Bhd மலேசியா***
***100% பங்குகளின் விற்பனை***

| | | |
|---|---|---|
| ***1987*** | ***3,567,000*** | |
| ***1990*** | ***2,266,000*** | ***583,000*** |

***வரையறுக்கப்பட்ட உபாலி (தாய்லாந்து)***
***(1985 ?) விற்பனை (?)***
***393,000***

***டேசா வின் 50% விற்பனை***

| | |
|---|---|
| ***உபாலி மலேசியா (1985?)*** | ***1,033,000*** |
| ***மொத்தம் ஐ.இரா.பவுண்*** | ***9,765,743*** |

மேற்குறித்த வெளிநாட்டு நிறுவனங்களின் இயக்குனர்கள் பாரிய சட்டபூர்வமான பங்குதாரர்கள் என்னும் உண்மையினை விளங்கிக்கொண்டதன்பேரில் , இந்த கூட்டு நிறுவன கட்டமைப்பு தொடர்பில் மேலும் அறிந்து கொள்ளும் நோக்கில் நூலாசிரியர் ஐக்கிய இராஜ்யத்தில் உள்ள சேனல் தீவுகளிலுள்ள ஜெர்சி தீவிற்கு விஜயத்தை மேற்கொண்டு, எவ்வாறு பட்டயக் கணக்காளர் நிறுவனங்களும் சட்ட அமைப்புக்களும் இந்த கூட்டு கட்டமைப்பை உருவாக்குகின்றன மற்றும் எப்படி இவை பெயரளவிலான பங்குதாரர்களையும் இயக்குனர்களையும் இந்த கம்பெனிகளுக்கு நியமிமிக்கின்றன என்பதனையும், பின்னர் எப்படி உண்மையான உரிமையாளரோடு இரகசிய கருவியை பாவிக்கின்றன என்பதனையும் கற்றறிந்தார், ஐக்கிய இராஜ்யத்தில் உள்ள சேனல் தீவுகளிலுள்ள ஜெர்சி தீவில் செய்யப்பட்ட ஆராய்ச்சியின்படி உண்மையான உரிமையாளரை மறைக்கும் பணம் சேர்க்கும் இதையொத்த கட்டமைப்புகளும் பொறிமுறைகளும் பல நாடுகளில் பின்பற்றபட்டமையானது உறுதியானது.

மேற்குறித்த நடவடிக்கையானது நடைமுறை உலகில் பரவும் ஒரு புற்றுநோயாக மாறியதுடன், அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு ஒரு உலக பிரச்சனையாக இருந்ததுமன்றி, அவர்களின் குடிமக்கள் இவ்வாறாக வேறு நாடுகளில் பணத்தை பதுக்கியதன் மூலம் சரியான வரியை அவர்களிடம் இருந்து பெறுவதில் அந்நாடுகள் சிக்கலை எதிர்நோக்கின.

மேலும் மிக முக்கியமாக வளர்ந்துவரும் நாடுகளில் நியாயமற்ற சமூக அரசியல் பலத்தை பாவித்து வறிய மக்களின் சொத்துக்களை சூறையாடியும் அபகரித்தும் வளர்ச்சி அடைந்த நாடுகளில் செய்வதை போல இவ்வாறு பதுக்குவதானது மேலும் பாரிய பிரச்சனையாக இந்த வளர்ந்து வரும் நாடுகளுக்கு மாறியுள்ளது.

எனவேதான் இன்றைய உலகில் வளர்ந்த நாடுகளும் வளர்ந்துவரும் நாடுகளும் இவ்வாறு வெளி நாடுகளில் "கூட்டு நிறுவன கட்டமைப்பில் பதுக்கப்பட்டுள்ள" பணம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன .

சில அரசியல் தலைவர்களாலும், பலம் பொருந்தியவர்களாலும், வசதி படைத்தவர்களாலும் வளர்ந்து வரும் நாடுகளில் உள்ள வறிய மக்களின் வளங்களை சூறையாடியும் அபகரித்தும் மேலும் அவர்களை வறுமையில் தள்ளி, அந்த பணத்தை இரகசியமாக அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பதுக்குவதன் மூலம் அந்த நாடுகள் தங்கள் நாடுகளில் உள்ள பணத்தினால் மேலும் இலாபத்தை அடைவதன் மூலம் நியாயமற்ற முறையில் வளர்ந்து வரும் நாடுகளிற்கும் அதன் மக்களிற்கு தீங்கையும் காயத்தையும் ஏற்படுத்துவதானது வெளிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் நூலாசிரியர் சட்டமானது அரசியல் அதிகாரமுள்ளவர்களின் தோட்டங்கள் தொடர்பில், அமுல்படுத்தப்படும் முறையையும் சட்டத்தின் முன்னிலையில் சமமற்ற வகையில் நடாத்தபடுவதையும் சட்டம் வியாக்கியானம் செய்யப்படும் முறையையும் கோடிட்டு காட்டியுள்ளார். அது போலவேஇறந்த ஒருவரது தோட்டங்கள் தொடர்பிலான விசாரணைகளில் நீதித்துறை நடவடிக்கைகளின் ஒன்றிப்பினையும் இந்த புத்தகத்தில் தெளிவாக வெளிக்காட்டப்பட்டுள்ளது.